

# GCE A'LEVEL STUDENTS DAY 2007











## STR/MUSLIM MADHYA M. V.
## (National School)
## SAMMANTHURAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தர மாணவர் தின சிறப்பு மலர்

**26 - ஏப்ரல் - 2007**

முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம்

[தேசிய பாடசாலை]

சம்மாந்துறை.

067 - 2260024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்புக் கீதம்

லா..... லலலல........

கோர்த்துக் கோர்த்து பா ஒன்று பாடுகிறோம்
நல்லவரவாகுக!
பூத்துப் பூர்த்து புன்னகை சேர்த்து வைப்போம்
நல்லவரவாகுக!
தென்றலாகும் உம் வரவாலே பூக்களாகிறோம்
பூக்களாகும் உம் வரவாலே மாலையாகிறோம்
**A/L** தின மேடை தனிலே இன்பம் காணவே
இசைகள் பாடி நாமும் அழைப்போம்
வருவீர் நீங்களே
நல்லவரவாகுக (04)

(கோர்த்து)

வைத்தியக் கலையின் கலாநிதியாம்
எங்கள் ஆபிதா வருகவே!
அறிவு வளர்த்திடும் அன்பு ஓங்கிடும்
உங்களின் வரவாலே
கல்விப் பணிமனை பணிப்பாளர் எம்
தௌபீக் **Sir** வருகவே!
எம் மண் மாந்தரின் கல்வி செழித்திடும்
உங்களின் வரவாலே..
தினமும் எம் வாழ்ந்து சிறந்து ஓங்கிட
அறிவின் சிகரங்களாய்
உமையே நாம் இங்கு தேர்ந்திருக்கிறோம்
அதற்காய் வர வேண்டுமே
கலைகள் பண்பாடு கல்வி எனப்பல
துறைகள் நாம் காணவே
விருப்பம் கொண்டே நாம் கூடி நிற்கிறோம்
அதற்காய் வர வேண்டுமே
உங்கள் வரவாலே இந்த தினமதிலே
என்றும் இன்பம் ஓங்குக
நல்லவரவாகுக (04)

(கோர்த்து)

கல்வி தந்திடும் எங்கள் சாலையின்
அதிபர் வருகவே!
கண்ணியம் ஓங்கிடும் நெறிகளும் சேர்ந்திடும்
உங்களின் வரவாலே!
ஈடில்லாத நல் பாட அறிவினை
ஈந்திடும் ஆசான்களே!
இதயம் மகிழ்ந்திடும் ஒழுக்கம் கூடிடும்
உங்களின் வரவாலே!
இனிதே எம் சாலை வாழ்க்கை தன்னையே
இதமாய் முடித்திட்ட ~
எம் சிரேஷ்ட நண்பர்கள் பிரிந்து செல்வதால்
உமையும் வரவேக்கிறோம்
நலமாய் இம்மேடை ஏறி நாம் ஒரு
விழாவை கொண்டாடிட
தினமும் உழைத்திட்ட எங்கள் நண்பர்கள்
நீங்களும் வர வேண்டுமே
உங்கள் வரவாலே இந்த தினமதிலே
என்றும் இன்பம் ஓங்குக

பாடல் மெட்டு :
பார்த்து பார்த்து கண்கள்
பூத்திருப்பேன்...........

**இயற்றியவர்**
**ஆதம்பாவா பெனாசிர் ஜஹான்**
**(தரம் 12 கலை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி...

**எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பெயரால்,**

**பொன்விழாக் கண்ட இக்கல்விக் கூடத்தின் இன்றைய A/L தின நிகழ்வை யொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். அல்ஹம்து லில்லாஹ்,**

மின்மினிப் பிரகாசத்தில் ஆங்காங்கே வாழ்ந்து கொண்டிருந்த எம்மவர்களின் வாழ்க்கைத் தரத்தை உலகளாவிப் பிரகாசிக்கும் அளவுக்கு அறிவும், ஆற்றலும், சாதுரியமும் நிறைந்ததாக மாற்றியமைப்பதில் கணிசமான அளவு பங்காற்றியுள்ள இக்கல்விக் கூடம் எனக்கும் ஒரு நாள் பிரியாவிடை தந்தது.

பலநூறு பட்டதாரிகளும், கலாநிதிகளும், சமூக முதல்வர்ளும், பிறப்பிக்கப் பட்டு அறிவுப் பாலூட்டி, சமூகத்திடம் சமர்ப்பிக்கப்படும் எங்களில் ஒவ்வொரு வரும், ஒவ்வொரு விதமான சூழ்நிலைகளுக்கு கைதிகளாகி விடுகிறோம்.

தமது சூழலை ஜெயித்து, சவால்களில் தலைநிமிர்ந்து, இலட்சியத்தைக் குறித்து சமூகத்தில் உறுப்பினராகும் பாடசாலையின் படைப்புகள் எம்மில் ஒரு சிலரே.

ஆனால், பல்லாயிரம் இளைஞர்கள் கலவரங்களினதும், காடைத்தனங்களினதும் கதாநாயகர்கள் போல் வாய்விட்டுப் பேசுவதற்கு அருவருக்கத்தக்க பழக்க வழக்கங்களுக்கு ஆளாவது மட்டுமன்றி, வழிதவறியவர்களின் கைப்பொம்மை களாகவும், அவர்கள் தான் நிலைத்த நிலைக்குப் பாச்சும் அம்புகளாகவும் ஆகி விடுகின்றனர்.

அத்தகைய பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு 'பாடசாலை மாணவர்கள் போலல்லாது முஸ்லிம் பாடசாலை மாணவர்களே நாங்கள்' எனத் தாங்கள் பாசறைப் பழக்கத்தை சிரமேற்கொண்டு எதிர் காலத்தில் கல்விப் பூங்காவுக்கு நறுமணம் வழங்கும் நல்லவர்களாக மிளிர எல்லாம் வல்ல அல்லாஹ் தௌபீக் செய்வானாக! ஆமீன், ஆமீன் யாறப்பல் ஆலமீன்
வஸ்ஸலாமு அலைக்கும், வறஹ்மதுல்லதஹி வபறகாதுஹு.

**- வைத்தியக் கலாநிதி. ஆபிதா அப்துல் கையூம்**
MBBS., MD. (SL)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி...

சம்மாந்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் பல ஆண்டுகளாக உயர்தர தினத்தைக் கொண்டாடி வருகின்றது. இதே போன்று சாதாரண தர மாணவர் தினத்தையும் கொண்டாடி வருவதும் மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. பாடசாலைக் கலாசாரத்தில் இவ்விரண்டு நிகழ்வுகளும் முக்கியம் பெற்று விளங்குவது இங்கு உற்று நோக்கக் கூடிய ஒரு அம்சமாக மாத்திரமன்றி, ஒரு பாடசாலையின் வெற்றியையும் பேரண்ட அளவில் மதிப்பிடக் கூடிய தாகவும் இது விளங்குகிறது.

பேரண்ட அளவில் மதிப்பிடக் கூடிய பல்வேறு அம்சங்கள் இப் பாடசாலையின் வெற்றியின் (Indicators) காட்டிகளாக விளங்குகின்றன. பாடசாலையின் பொதுப் பரீட்சை அடைவு மட்டங்கள் மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளன.. பிர்னாஸ் என்ற மாணவன் கடந்த வருட உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் அகில இலங்கையிலேயே இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளமை இப்பாடசாலையின் ஒரு வரலாற்றுச் சிறப்பாகும்.

கடந்த வருடம் நடைபெற்ற வட-கிழக்கு மாகாண ஆங்கில தினப்போட்டியில் இப்பாடசாலையின் இரு மாணவிகள் மாகாண மட்டத்தில் முதல் இடங் களைப் பெற்று, புது டில்லியில் நடைபெற்ற இளைஞர் மகாநாட்டில் வட-கிழக்கு மாகாணத்தையே பிரதிபலிக்கும் பிரதிநிதியாக இப்பாடசாலையின் மாணவி செல்வி. நுசைபா கலந்து கொண்டமை வெற்றியின் இன்னொரு காட்டியாகும்.

ஆங்கிலக் கல்விக்கும், கணனிக் கல்விக்கும் முக்கியம் கொடுக்கப் பட்டிருப்பது காலத்தின் தேவையை உணர்ந்த செயற்பாடாகும்.

இத்தகைய இப்பாடசாலையின் பின்னணியில் இன்று கொண்டாடப்படும் இவ்வுயர்தர மாணவர் தினம் நிச்சயம் பல நன்மையான விளைவுகளையும் நிரந்தரமான நினைவு அலைகளையும் மாணவர்களுக்கிடையே ஏற்படுத்தும். என்று நம்புகின்றேன். இம்மாணவர்கள் பல்வேறு சிறப்புகளையும் பெற்று இப்பாடசாலைக்கும் இச்சமூகத்திற்கும் உதவ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**- அல்-ஹாஜ் M. T. A. தௌபீக்**
வலயக்கல்விப் பணிப்பாளர்
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் செய்தி...

**பாடசாலை வாழ்க்கையில் உயர்தர மாணவர்கள் கடைசிக்கட்டத்தில் உள்ளார்கள். பாடசாலையை விட்டுப் பிரியப்போகும் மாணவர்கள் தங்களைப் பற்றிய உள்ளகப்பார்வையைச் செலுத்துகின்ற சந்தர்ப்பமாகவும் தங்களைப் பற்றியும் தங்கள் எதிர்காலம் பற்றியும் பல்வேறு வினாக்களை எழுப்பும் சந்தர்ப்பமாகவும் 'உயர்தர தினம்' அமைகின்றது. மாணவர்கள் நல்ல தீர் மானங்களை எடுப்பதற்கும் தன் அன்றாட செயல் முறைகளில் மாற்றங் களை ஏற்படுத்துவதற்கும் இந்த உயர்தர மாணவர் தினம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதும் இதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் இத்தகைய பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் கொண்டாடப்படும் 'உயர்தர தினம்' இம்முறையும் வழமைபோல் கொண்டாடப் படும் இந்நிகழ்வில் மாணவர்களோடு கலந்துரையாட சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.**

முன் எப்போதையையும் விட தற்பொழுது மாணவர்கள் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். இத்தகைய சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு அவர்களுக்கு சிறந்த வழிகாட்டல் அவசியமாகின்றது. வாழ்க்கை பற்றிய பார்வை முக்கியமானதாகும். குறிப்பிட்ட கால இம்மை வாழ்க்கையில் அடைய வேண்டிய இலட்சியங்கள், நெறிமுறைகள், இஸ்லா மிய அமைப்பு முறைகள் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். தனி மனித பிரச்சினைகள் சமூகப்பிரச்சினைகளுக்கு தீர்வாக இஸ்லாமிய வாழ்க்கை முறை முழுக்க முழுக்க பின்பற்றப்படுதல் அவசியமாகும். இளமைக் காலத்தை எவ்வாறு செலவளித்தாய் என்ற இறைவனின் கேள்விக்கு உரிய முறையில் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு மாணவர்களைச் சார்ந்ததாகும். அதற்கேற்ற வகையில் மாணவர்கள் தங்களின் இளமைக் காலத்தை சீரான முறையில் செப்பனிட வேண்டும்.

**மாணவர்களின் இம்மை மறுமை சிறப்பானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.**

**- எச். எம். பாறூக்**
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L Day ஆசிரியர் மஜ்லிஸ் - 2007

| | | |
|---|---|---|
| தலைவர் : | ஜனாப். ஏ. எல். அப்துல் றஹீம் | |
| செயலாளர் : | ஜனாப். எச். எம். அன்வர் அலி | |
| பொருளாளர் : | ஜனாப். ஏ. ஆர். எம். உவைஸ் | |
| போசகர்கள் : | ஜனாப். எச். எம். பாறுக் | - அதிபர் |
| | ஜனாப். யூ. எம். இப்றாஹீம் | - பிரதி அதிபர் |
| | ஜனாப். கே. எம். எஸ். எம். தமீம் | - பிரதி அதிபர் |
| | ஜனாப். பீ. எம். எம். இப்றாஹீம் | - உதவி அதிபர் |
| | ஜனாப். என். மஃறூப் | - உதவி அதிபர் |
| | ஜனாப். எம். எம். நிஷார்டீன் | - உதவி அதிபர் |

## மாணவர் ஆசிரியர் மஜ்லிஸ் - 2007

| | | |
|---|---|---|
| | ஜனாப். எச். எம். அன்வர் அலி | - பிரதம ஆசிரியர் |
| | ஜனாப். ஏ. ஆர். எம். உவைஸ் | |
| | ஜனாப். ஏ. ஆர். எம். அஸ்ரப் | |
| | ஜனாபா. யூ. அபூசாலி | |
| | ஜனாபா. எம். செயினுலாப்தீன் | |
| | ஜனாப். எம். ரீ. முஸம்மில் | |
| தலைவர் | : செலவ்ன். எம். எப். பஸாறத் | - 12 வர்த்தகம் |
| செயலாளர் | : செல்வன். எம். ரீ. எம். சாகிர் | - 12 கணிதம் |
| உப - தலைவர் | : செல்வி. எம். எப். பஸீலா | |
| உப - செயலாளர் | : செல்வி. எம். எச். எப். ஹஸானா | - 12 வர்த்தகம் |
| பொருளாளர் | : செல்வன். எஸ்.எல். எம். சமீர் | - 12 கணிதம் |
| உப - பொருளாளர் | : செல்வி. ஏ. எல். றினோசா | |
| சஞ்சிகைக் குழு | : செல்வி. ஏ. வீ. பெனாசிர் ஜஹான் | |
| | செல்வி. எச். சனாஸ் | |
| | செல்வன். எம். ஏ. எம். பாவா | |
| | செல்வி. யூ. ஹஸ்ஸானா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகங்களுக்கு 2007ல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்

## 2006 - AUGUST

**Medicines**

| | | |
|---|---|---|
| 1. | Miss. Mohamed Salih Safana Begum | 1.8199 |

**Agriculture**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Mohamed Musthafa Mohamed Sufad | 1.4987 |
| 2. | Miss. Mohamed Thamby Risona | 1.4656 |
| 3. | Azeez Maideen Ahamed Zakee | 1.4372 |
| 4. | Ibra lebbe Mohamed Ali | 1.0851 |
| 5. | Nizamdeen Mohamed Ziyadh | 1.0825 |

**Biological Science**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Mahroof Mohamed Najeem | 1.0004 |

**Engineering (MPR)**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Abdul Majeed Mohamed Manas | 1.7715 |
| 2. | Mr. Umar Lebbe Sitheeq | 1.4928 |
| 3. | Mr. Aatham Bawa Mohamed Farhan | 1.4286 |
| 4. | Mr. Ahamed Razik Mohamed Arzath | 1.4043 |

**Computer Science**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Ahamed lebbe Faizul Hazan | 1.1153 |
| 2. | Mr. Ibralebbe Mohamed Rizvi | 1.0796 |

**Physical Science**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Ahamed Ismail Ahamed Suhail | 0.7836 |
| 2. | Mr. M. H. Mohamed Farhan | 0.5785 |

**Surveying Science**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Atham Bawa Mohamed Ramees | 1.2404 |

**Applied Science (Phy - Sc)**

| | | |
|---|---|---|
| 1. | Mr. Aliyar Riyal | 1.0257 |
| 2. | Mr. Mohamed Rasheed fouzan Ahamed | 0.9272 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Arts

| | | |
|---|---|---|
| 1. | Mr. Asanar Moulavi Mohamed Firnas | 2.4155 |
| 2. | Miss. Sabri Irshad akeela Banu | 1.8586 |
| 3. | Miss. Mohamed Musthafa Fasloon | 1.6782 |
| 4. | Miss. Mohamed Ismail Fathima Shakira | 1.6733 |
| 5. | Miss. Abdul Kather Rinosa | 1.5549 |
| 6. | Mr. Aliyar Fahir | 1.4735 |
| 7. | Miss.Kalanther Sahib Kansul Mareeha | 1.4288 |
| 8. | Miss. Sulaimalebbe Subhan | 1.4264 |
| 9. | Mr. Najmudeen Mohamed Rasmy | 1.4110 |
| 10. | Miss. Abdul Raheem Riswana | 1.3537 |
| 11. | Miss. Gulam Mohamed Rusdha Zeena | 1.2970 |

## Arts (SP) Mass Media

| | | |
|---|---|---|
| 1. | Miss. Abdul Raheem Fathima Sabihani | 1.2386 |
| 2. | Miss. Atham Bawa Mufliha | 1.2032 |
| 3. | Miss. Meera lebbe Nusrath Jahan | 1.1836 |
| 4. | Mr. Mohamed Thamby Mohamed Rizvi | 1.1764 |
| 5. | Miss. Ibra lebbe Farosa | 1.1535 |

## Arts (SP) Performing

| | | |
|---|---|---|
| 1. | Miss. Ahamed lebbe Fareena | 1.1098 |
| 2. | Miss. Mohamed Abdul Munaf Mareeha | 1.0890 |

மிஸ்வாக் செய்வதைக் கடைப்பிடித்து வாருங்கள் அதில் 10 பிரயோசனங்கள் இருக்கின்றன.

1) வாயைச் சுத்தப்படுத்துகின்றது.
2) அல்லாஹுத்தஆலாவின் திருப்திக்குக்காரணமாகிறது
3) ஷைத்தானுக்கு கோபத்தை உண்டாக்குகிறது
4) மிஸ்வாக் செய்பவரை அல்லாஹுத்தஆலா தனது நேசனாக்கிக் கொள்கிறான்
5) மலக்குகளும் நேசராக்கிக்கொள்கிறார்கள்
6) பல் ஈறுகளுக்கு சக்தி அளிக்கிறது
7) சளியை நீக்குகிறது.
8) வாயின் துர்வாடையை நீக்கி நறுமணத்தை உண்டாக்குகிறது.
9) பித்தத்தை போக்குகிறது.
10) பார்வையைக் கூர்மையாக்குகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் கிடக்கிலிருந்து.....

- பிர்னாஸ்
462, பஸார் 2ஆம் ஒழுங்கை
சம்மாந்துறை - 05

முதலில் A/L தின விழா நன்றாக நடைபெற எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

O/L பரீட்சையை முடித்துவிட்டு பல்கலைக்கழக கனவுடன் உயர்தரத்துக்குள் நுழைந்தேன் முதலில் பாடத்தெரிவு என்பது முக்கிய விடயம். கலைப்பிரிவைப் பொறுத்தவரை எமது பிரதேசத்தை கற்பதற்கான சிறந்த வளங்கள் உள்ள பாடங்களை நாம் தெரிவு செய்ய வேண்டும் அத்தடன் இப்பாடத்தை என்னால் கொண்டு செல்லமுடியுமா என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும் அந்த வகையில் நான் தமிழ், அளவையியல், இஸ்லாம் ஆகிய பாடங்களை தெரிவு செய்தேன்.

'தெண்டித்தவன் பெற்றுக்கொள்வான்' என்ற நபிமொழிக்கிணங்க எந்தவொரு விடயத்திலும் வெற்றிபெறுவதற்கு சுய முயற்சி அவசியமாகும் அவ்வகையில் வெற்றிபெற வேண்டும் என்று உறுதிபூண்டவன் தன்னுடைய முயற்சியை இலக்கு நோக்கிநகர்த்துவான் ஒவ்வொருவரும் தன்னுடைய தொழிலில் சிறந்த லாபத்தை அடைய கடுமையான முயற்சி மேற்கொள்வர் தியாகம் இல்லாமல் வெற்றியை எதிர்பார்க முடியாது. A/L காலம் மிகமுக்கியமான ஒருகாலமாகும் இக்காலம் எமது வாழ்க்கையை தீர்மானிக்கம் ஒரு காலம் மட்டுமன்றி இக்கட்டத்திலேயே ஏனைய விண்விளையாட்டுக்கள் தொலைக் காட்சி, போன்றவற்றை தவிர்த்துக்கொண்டேன். கிடைக்கும் நேரங்களையெல் லாம் படிப்பதற்காக பயன்படுத்தினேன் ஏனெனில் மனதில் பல்கலைக்கழகம் நுழையவேண்டும் என்ற அவா இருந்ததேயாகும்.

வழிகாட்டல் என்பது அடுத்த முக்கிய விடயமாகும் நாம் எவ்வாறுதான் படித்தாலும் போக வேண்டிய சரியான பாதை தெரியாவிட்டால் சரியான இலக்கை அடைய முடியாது. இவ்வகையில் எனக்கு இறைவன் துணை கொண்டு பாடசாலையிலும் மாலை நேர வகுப்புக்களிலும் சிறந்த வழி காட்டல்கள் கிடைத்தன. என்னுடைய பாட ஆசிரியர்களான சபியா (ஆசிரியை), சரீபா (ஆசிரியை) அஸ்ரப் ஆசிரியர் ஆகியோர் சிறந்த முறையில் எனக்கு கற்பித்தார்கள். நாங்கள் பாடம் படிக்க அலுத்துப் போயிருந்தாலும் அவர்கள் சிரமமடுத்து எங்களுக்கு கற்பிப்பார்கள். சிறந்த பயிற்சிகள், ஒவ்வொரு பாடத்திலும் கணிப்பீட்டுப் பரீட்சை என்ற அடிப்படையில் பாடத்தில் நன்கு தேர்ச்சியடையச் செய்தார்கள். மேலும் பல நுட்பங்களையும் வழங்கி எங் களுடைய தேடலுக்கும் வழி செய்தார்கள். அத்தோடு என்னுடைய ரியூசன் ஆசிரியர்களும் எனக்கு வழிகாட்டினார்கள். பல என்னுடைய மூத்த பல் கலைக்கழக மாணவர்களும் பல கற்பித்தல் முறைகளை எனக்கு சொல்லிக் கொடுத்தார்கள். எனவே மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களின் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டலின்பால் செல்வதுடன் பல்கலைக்கழக மாணவர்களையும் அதிகமாக சந்தித்து அவர்களிடமும் பல விடயங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

சூழல் ஒரு மனிதனை மாற்றும் என்பார்கள். எனவே ஒரு மாணவனுக்கு சிறந்த கல்விச் சூழல் அவசியம். மேலும் தேடல், சிறந்த ஆசிரியர்கள், நூலகம் என்பன நன்றாக அமைதல் வேண்டும்.

எல்லாவற்றிக்கும் முதலாக இறைவனுடைய நாட்டம் அவசியம். உண்மை யிலே என்னைவிட அதிகமாக படித்த மாணவர்களும் இருப்பார்கள். எனக்கு ஏ. எல். பாடப்பரப்பு முழுவதும் தெரியும் என்பதற்கில்லை. ஆனால் இறைவன் எனக்கு எந்த விடயங்கள் நன்றாக தெரியுமோ அவற்றை பரீட்சையில் வினாவாக ஆக்கி வைத்தான். படிக்கும் காலத்தில் சில மாணவர்கள் இறை தொடர்பை குறைத்துக் கொள்வார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரை அல்லாஹ்வுடனான தொடர்பை அதிகமாக வைத்திருந்தேன். சில நேரங்களில் படிப்பவை சரியாக நினைவில் நிற்கா விட்டால் பள்ளிவாசலுக்கு சென்று இறைவனை தியானித்து விட்டு வந்து படிப்பேன். மேலும் என்னுடைய பெற்றோர், ஆசிரியர்களின் துஆவும் எனக்கு உதவியாக இருந்தது. என்னு டைய ஆசிரியர்கள் கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாது எனக்கு துஆச் செய்யக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். இந்த இடத்தில் என்னுடைய ஆசிரியர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்முடைய பாடசாலை பல துறைகளிலும் சாதனைகளை புரிந்து கொள்டு வருகின்றது. எனவே நீங்களும் பாடசாலைக்கு சிறந்த நற்பெயரை ஈட்டிக் கொடுக்க வேண்டும் என அதிபர் அடிக்கடி எங்களுடைய வகுப்பறைக்கு வந்து உற்சாகமூட்டுவார். எல்லா மாணவர்களையும் போல் எனக்கும் பாடசாலை மீது பற்று இருந்தது. பாடசாலையில் மாணவர் தலைவராக இருந்த சிறிது காலம் கடமையாற்றியது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அத்தோடு ஒரு சிறந்த பெறுபேற்றைச் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது. அதிபரோடு மட்டுமல்லாது ஆசிரிர்களும் வழங்கிய உற்சாகம் எனக்கு பெரும் உதவியாக இருந்தது.

இவ்வாறாக நான் சிறப்பாக படித்ததைக்கொண்டு மாணவர்கள் நான் அனைத்தையும் துறந்துவிட்டு படிப்பிலேயே மூழ்கியிருந்தேன் என்று நினைக்க வேண்டாம். உயர்தர காலம் எமது பாடசாலை வாழ்க்கையின் இறுதிக் காலகட்டம் போய்விட்டால் கிடைக்காத ஒன்று பாடசாலை வாழ்க்கை. எனவே அதிகமாக பாடசாலைக்கு கட் அடிக்காமல் பாடசாலை வாழ்க்கையையும் நன்கு அனுபவித்தேன்.

எமது பாடசாலையின் வளர்ச்சி முன்னேறிக்கொண்டே செல்ல வேண்டும். மாணவர்கள் பாடசாலை மீது பற்றுள்ளவர்களாகவும் ஆசிரியர்களை மதிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். எமது பாடசாலையில் இம்முறை தீவு ரீதியாக முதலாம் இடத்தை பெற வேண்டும் என இவ்வருட ஏ.எல். தினத்தை கொண்டாடும் மாணவர்களை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைஷிக்குலத்தின் முத்து

வானோரும் தீனோரும்
வான் மறையை வழியனுப்ப
கானகமும் வானகமும்
கலையழகால் வித்திருக்க
குறைஷிக் குலத்தின் முத்தென
குணத்தில் உயர்ந்த ~ சொத்தாக
இறையோன் தன்னருள் பெருகிவிட
எம் உம்மி நபி ~ இக்
காசினியிலே கால்பதித்தார்

மேலான தன்னருளால் ~ நீர்
நாற்பதாவது வயதில்
நபிப்பட்டம் பெற்று
ஐம்பத்தியொரு வயதில்
மிஹ்ராஜூம் சென்று
தொழுகை எனும்
புனிதப் பரிசைப்
பெற்று வந்தாய் ~ உன்
உம்மத்திற்கு

மன்மதனாய் ~ நீ
அவனியில் அவதரித்து
அல்~அமீன்
அஸ்~ஸாதிக் எனும்
அழகிய நாமங்களைப் பெற்றாய்
அன்றைய
ஜாஹிலியாக் கால மக்களிடம்
உத்தமரே!

சத்தியம் உன்னைப் போல்
சமூகத்தை வென்றோர் இல்லை
முத்தென நபியே;
உனக்கு ~ ஜன்னதுல் பிர்தௌஸில்
கௌவுல் கௌதர் தடாகமும்
லிவாஹூல் ஹம்து கொடி நிழலும்
உரித்தாய் இருக்கின்றது
என்றென்றும்....

நபியே !
இரு சோதி உடையவர்
என ~ உனை
அழைத்த வேளை
ஏடுகள் எல்லாம் எழுதினவே
ஏந்தல் நபியின் வரலாற்றை.

- ஆதம்பாவா பாத்திமா பஸ்மினா
$13^{D}$ கலை (2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தின் பார்வையில் இயற்கை அனர்த்தங்கள் புகட்டும் படிப்பினைகள்

அனர்த்தங்கள் சோதனைகள் என்பன தற்காலங்களில் மட்டும் நிகழ்பவை அல்ல. மதின சமுதாயத்தின் ஆரம்பகாலம் தொடக்கம் நிகழ்ந்துள்ளன. இதனை உணர்ந்து கொள்வது ஒவ்வொர முஸ்லிமினதும் தலையாய கடமையாகும்.

அதாவது நூஹ் (அலை) அவர்களுடைய சமுதாயத்தினருக்கு வெள்ளத்தின் மூலம், யூசுப் (அலை) அவர்களுடைய சமுதாயத்தினருக்கு பஞ்சத்தின் மூலமும், ஆத்-சமூத் கூட்டத்தினரை பலத்த புயல் மூலமும் அல்லாஹுத்தஆலா சோதித்துள்ளான் இவ்வாறான சோதனைகள், வேதனைகள் ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன அவையாவன

01) அல்லாஹ்வின் அழைப்பை மறுப்பதும் மறப்பதும் ஒரு பிரதான காரண மாக அமைகிறது.

நூஹ் (அலை) அவர்களுடைய சமுதாயத்தினருக்கு அல்லாஹ் 950 வருடங்கள் வரை அருள் மொழிகளையும் உபதேசங்களையும் வழங்கினான் ஆனால் அவர்களில் சொற்ப பேரைத்தவிர அனைவரும் நிராகரிக்கப்பட்டார்கள். அதனால் தான் அவர்களுக்கு அவ்வாறனதொரு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

02) இறைநம்பிக்கை உடையவர்களுடைய தீனை / ஈமானை உறுதிப் படுத்தல்

இவ்வாறான பல அனர்த்தங்கள் நிகழும் போது மு.்.மின்கள் அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவார்கள். அனர்த்தங்களும் சோதனை களும் ஒரு பிரதேசத்தில் ஏற்பட்டால் அப்பிரதேசத்தில் வாழும் அல்லாஹ்வின் நல்லடியார்களும், அல்லாஹ்வை நிராகரிப்பவர்களும் பாதிக்கப்படுவார்கள் எனவே தான் அல்லாஹ்விற்கு மாறு செய்ததால்தான் அவர்களுக்கு அவ் வாறு ஏற்பட்டுள்ளது என்று எம்மால் ஒரு போதும் கூறமுடியாது ஏனெனில், அல்லாஹ்வின் நேசரான முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் ஏனைய நபிமார்களுக்குக் கூட வேதனைகளும் சோதனைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இது எல்லோரும் அறிந்த நன்றாகத் தெரிந்த ஒரு உண்மையாகும்.

03) மு.்.மின்கள் ஏனையோரின் குறைகளைக்கண்டு அதனை தடுக்காமல் இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் என்பவர்கள் தவறு செய்யக் கூடியவர்களே அன்றி அவர்கள் மலக்குகள் அல்ல. அல்லாஹ் ஏனைய படைப்பிலிருந்து மனிதர்களை சிறப் பாகப்படைத்து பகுத்தறிவையும் கொடுத்துள்ளான் ஆகவே தான் தாம் செய்யும் தவறுகளை உணர்ந்து பாவமன்னிப்புக்கோரல் வேண்டும். தற்காலங்களில் அல்லாஹ்வை தூய்மையாக வழிபடும் மக்கள் அவர்கள் விரும்பிய பாதை யில் சென்று கொண்டிருக்கிறார்களே தவிர ஏனையோரின் தவறுகளை சுட்டிக்காட்டவில்லை.

இவ்வாறான பல காரணங்களினால்தான் தற்காலங்களிலும் மண்சரிவு, வெள்ளப் பெருக்கு, பிரளயம், கடற்கோள், சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் எம் அனைவரையும் கடுமையாக தாக்கியதும் மறக்கமுடியாததுமான ஒரு பாரிய நிகழ்வாகும் சுனாமி அனர்த் தத்தின் போது எம்மால் ஒற்றுமை, பிறருக்கு உதவுதல் அல்லாஹ்வை அதிகமாக வணங்குதல், தவறுகளை உணர்ந்து திருந்துதல் போன்ற பல விடயங்களை காணமுடிந்தது.

ஒரு தடவை அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் நபியவர்கள் வாந்திபேதி நோயைப் பற்றி வினவினார்கள் அதற்கு நபியவர்களிடம் "அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு வாந்திபேதி நோயை இலகுவாக்கியுள்ளான்" என மறு மொழியுரைத்தார்கள். இந்த ஹதீஸின் மூலம் நாம் உணர்வது என்னவென் றால் வேதனைகளும் சோதனைகளும் அல்லாஹ்வினால் ஏற்படுபவை அதனைப் பொருந்திக் கொள்வது நம்முடைய கடமையாகும்.

"உறுதியாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு பூமியில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன" (அல்-குர்ஆன் 51:20 )

இவ்வாறு அல்லாஹுத்தஆலா தனது திருமறையின் சூறதுல் பகறா போன்ற பல இடங்களிலும், அல்-ஹதீஸ் ஆகியவற்றின் மூலமும் உலக மக்களுக்கு அனர்த்தங்கள் சோதனைகளின் நிலைகளை மறைமுகமாக சுட்டிக்காட்டி யுள்ளான்.

நூஹ் (அலை), ஸாலிஹ் (அலை), யூசுப் (அலை) லூத் (அலை) ஆகிய நபிமார்களின் காலத்தில் கூட சோதனைகளும் வேதனைகளும் இறங் கியுள்ளன என்பதை உணர்ந்து வேதனைகளும், சோதனைகளும், அனர்த்தங் களும் அல்லாஹ்வினால் தான் ஏற்படுகின்றன ஆகவே அல்லாஹ்வுக்காக பொறுமையாக வாழ்வோம்.

உண்மையாக முஸ்லிமானவர்கள் ஏதாவது நடந்தால் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவான் மாறாக கெடுதிகள் ஏற்பட்டால் அல்லாஹ்விற்காக பொறுமையை கடைப்பிடிக்கிறான். எனவேதான் நாம் அனைவரும் உண்மையான முஸ்லீமாக வாழ முயற்சி செய்வோம் அவ்வாறு செய்தால் மறுமையில் நல்ல பயனைப் பெறலாம்.

அல்ஹம்துலில்லாஹ்.

க. பாத்திமா ஹஸீனா (12 B/O)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய ரீதியில் 2007ல் இமாலயச்சாதனை! 'Z Scor' 2.4155


**2006**ல் இடம்பெற்ற **G. C. E. (A/L)** பரீட்சையில் தேசிய ரீதியில் இவர் கலைத்துறையில் **2**ம் இடம் பெற்றுள்ளார். கிழக்கிலங்கையின் கல்வி வரலாற்றில் இவ்வாறான சாதனைகள் மிக மிக அரிதாகும். இந்த வகையில் எமது பாடசாலை மாணவன் **AMM. பிர்னாஸ்** அவர்களை எமது பாடசாலை வாழ்த்தி கௌரவித்து, பிரார்த்தனை புரிகின்றது.

- பாடசாலை சமூகம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பாசிரியருடன் மாணவ - மாணவிகள் - 2007




13 MATHS



12 BIO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாமிய நீதி முறையை இலங்கையில் பிரயோகிக்கலாமா?

**- H. M. அன்வர் அலி**

**“ஆணோ பெண்ணோ எவர் திருடினாலும் இத்தீய செயலுக்குத் தண்டனையாக அவர்களின் கைகளைத் துண்டித்துவிடுங்கள்” (அல்-குர்ஆன் 5:38)**

**“விபச்சாரம் செய்த ஆண், விபச்சாரம் செய்த பெண் இவர்களில் ஒவ்வொரு வரையும் நூறு கசையடி அடியுங்கள்” (அல்-குர்ஆன் 24:2)**

**எவரேனும் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவன் கொண்டு வராவிட்டால் அவனை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். (அல்-குர்ஆன் 24:4)**

மேலே கூறிய அல்-குர்ஆன் வசனங்கள் இஸ்லாமிய நீதி முறையோடு சம்மந்தப்பட்டவைகளாகும். இந்த குற்றவியல் தண்டனைகளைப் பெறும் சமுதாயம் காலப்போக்கில் ஒழுக்கப் பண்புள்ள அமைதியான சமூகமாக மாற்ற மடையும் இவற்றில் முஸ்லிம்கள் மத்தியில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. ஆனால் இவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய அரசியல் சூழ் நிலை, மற்றும் முஸ்லிம் அரசியலின் பலம் பற்றிய கேள்விகள் முக்கியமான வைகளாகும்

இஸ்லாமி ஷரிஆவுடன் தொடர்புபட்ட விடயங்களில் முஸ்லிம் தனியார் சட்டமும் வக்பு சட்டமும் இலங்கையில் நடைமுறையில் இருந்து வருகின்றது. ஆனால் மேலே கூறிய தண்டனைகள் நீதி விடயங்கள் பற்றிய ஒரு கருத்தியல் கூட முஸ்லிம் புத்திஜீவிகள், முஸ்லிம் கட்சிகள் மத்தியில் காணப்படுகின்றதா என்றால் இல்லை என்றே கூற வேண்டும் இந்த விடயம் பற்றிய கருத்தினை எம்மக்கள் மத்தியில் வைக்கின்ற பொழுது திடீரென ஒரு பதில் வரும் ‘இது முஸ்லிம் நாடா இவற்றையெல்லாம் நடைமுறைப் படுத்த குர்ஆனிய சட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்த முடியாது’ இந்த பதில் ஒரு பலவீனமான சமூகக்கட்டமைப்பை அல்லது முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வரலாற்றோடு பரீட்சையமில்லாதவர்களால் முன்வைக்கப்படலாம். ஆனால் இலங்கை முஸ்லிம்கள் பிரித்தானியர் காலத்தில் இருந்து தமது சமய நடவடிக்கைகளையும் சில ஷரீஆவோடு சம்பந்தப்பட்டவைகளையும் போராடிப் பெற்றுவந்துள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னரும் பல்வேறு போராட்டங்கள் மூலம் தமது உரிமைகளை வென்றெடுத்துள்ளனர். பௌத்த நாடொன்றில் ஒரு சிறுபான்மை முஸ்லிம்கள் சிங்கள தலைமைகளோடு ராஜதந்திர அணுகுமுறையுடன் இதுவரைகாலமும் பெற்று வந்த உரிமைகள் சிலவற் றைப் பார்ப்போம்.

01) 1885ல் முஸ்லிம் விவாகப்பதிவுச் சட்ட நகல் ஒன்றினை சட்ட நிருபண சபையில் சமர்ப்பித்து அவற்றில் திருத்தங்களை மேற் கொண்டனர் 1806 இல் முஸ்லிம் விவாக வாரிசுரிமைச் சட்டம். அறிமுகம் செய்யப் பட்டது.

02) 1956ல் வக்புச்சட்டம் அமுலுக்கு வருகிறது.

03) வீடுகளில் ஆடு அறுக்கக்கூடாதென ஒரு சட்டத்தை 1909ம் ஆண்டு கொழும்பு மாநகரசபை அமுலாக்க முயற்சித்தது பின்னர் முஸ்லிம் போராட்டத்தால் தோல்வியடைந்தமை.

04) 1924ல் இலங்கையில் முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்டு உருவாக் கப்பட்ட 'முகம்மதியர் தேர்தல் தொகுதி' அமைக்கப்பட்டு அதன் வழியாக கௌரவ மாக்கார் மாக்கான், அப்துல் காதர், T.B. ஜாயா ஆகியோர் சட்ட சபைக்கு மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்படல்

05) கல்யாண விதிகளை மீறியோர் கொழும்பில் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது ((முஸ்லிம்களால்). இவைகள் இலங்கை சுதந்திரம் அடை வதற்கு முன்னமே பெற்றுக் கொண்ட உரிமைகளாகும். 19ம் நூற்றாண்டி லேயே 'சட்டசபையில் பிரதி நிதித்துவத்திற்காக' முஸ்லிம் தலைவர் கள் போராட்டம் நடாத்தி வெற்றி பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க தாகும். சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முஸ்லிம் தலைவர்கள் தமது சமூகம் சார்ந்த பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்தி அவைகளில் வெற்றிகண்டு வந்துள்ளனர் உதாரணமாக

1) தேசிய ரீதியில் முஸ்லிம் பாடசாலைகளின் உருவாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) மௌலவி ஆசிரியர் நியமனம் இஸ்லாம் அரபு இஸ்லாமிய நாகரீகம் போன்ற பாடங்கள் பாடசாலை, பல்கலைக்கழக மட்டத்தில் அமுலுக்கு வந்தமை.
3) 1988ல் SLMC தேர்தல் ஆணையாளரால் அரசியல் கட்சியாக அங்கீ கரிக்கப்படல்.
4) முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளின் தோற்றம்.
5) முஸ்லிம் கலாசாரத்திணைக்களம் (1981).
6) தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
7) இஸ்லாமிய கலாசார பீடம் அமைக்கப்படல் என்பவைகள் எமது தலைவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட எமது அடிப்படை மதகலாசார உரிமைகளாகும்.

எனவே வரலாற்றைப் பின்னோக்குகின்ற போது முஸ்லிம் சமூகம் இலங்கையில் தமது சமூக, பொருளாதார, கலாச்சாரத்தேவைகளை அவ்வப்போது பெற்று வந்துள்ளதைக் காணலாம். எனவே இந்த நாட்டில் முஸ்லிம்களின் மத, கலாசார விடயங்களை அமுல்படுத்துவதில் எந்தத் தடையுமில்லை என்பதை வரலாறு கூறுகின்றது.

சிங்கள மன்னர்களில் இருந்து இந்தநாட்டின் பொதுச்சட்டங்களுக்கு இலங்கை முஸ்லிம்கள் உட்பட்டிருந்தனராயினும் அக்காலம் முதலே தமது சமய மரபுகளையும் தனியார் சட்டங்களையும் பின்பற்ற ஆட்சியாளர்கள் அங்கீ காரம் அளித்தனர் ஐரோப்பியர் காலம் முதல் சிங்கள தலைவர்கள் வரை முஸ்லிம்களோடு நெருக்கமான உறவையும் எது மத கலாசார பாரம்பரியங் களையும் மதித்து அங்கீகரித்து வந்துள்ளனர். எனவே எமது குர்ஆனிய சட்டங்களை மெல்ல மெல்ல அமுலாக்குவதிலும் அவற்றிற்கு சட்டவடிவம் கொடுப்பதிலும் முஸ்லிம் புத்திஜீவிகள் கவனம் செலுத்த வேண்டும். அசாத்தியம் (Agnosticism) எனும் கொள்கையிலிருந்து விடுபட்டு குர்ஆனை நடைமுறையில் பிரயோகிக்க முயலவேண்டும்.

இப்போதுள்ள நீதி சம்மந்தமான ரோமன் டச்சுச்சட்டங்கள் உயிரற்றவைகள் இவைகள் மனித சமூகத்திற்கு பயனளிக்கத்தக்கவைகள் எமது காவல் நிலை யங்கள் பந்தம் வாங்கும் இடங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. எமது நாட்டின் நீதி முறைகள் அல்லாஹ்வின் சட்டங்களுக்கு எதிரானவைகள் எனவே இவற்றிலிருந்து எமது சமுதாயம் விடிவு பெற 'இஸ்லாமிய நிதிமன் றங்கள்' ஏற்படுத்தப்படல் வேண்டும். இவை தொடர்பான சட்டமூலங்கள் முஸ்லிம் சட்சிகளால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படல் வேண்டும். எனவே இந்தவிடயத்தில் முஸ்லிம் புத்திஜீவிகளன் கூடிய கவனம் செலுத்த அல்லாஹ் அருள்புரிவானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Muslim Madhya Maha vidyalaya (National School) Sammanthurai.

### SUMMARY OF RESULTS G.C.E. (A/L) - 2006 APRIL

| Sub No | Subject | No.of sat | Grade | | | | No. of Pass | Percentage 2006 % |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | A | B | C | S | | |
| 01 | Physics | 90 | -- | 04 | 20 | 32 | 56 | 62.22 |
| 02 | Chemistry | 90 | 02 | 05 | 19 | 26 | 52 | 57.77 |
| 09 | Biology | 53 | 02 | 01 | 23 | 17 | 43 | 81.13 |
| 10 | Combined Maths | 37 | 02 | 03 | 08 | 11 | 24 | 64.86 |
| 21 | Economics | 37 | 02 | 05 | 11 | 12 | 30 | 81.08 |
| 22 | Geography | 13 | -- | -- | 10 | 02 | 12 | 92.30 |
| 23 | Political Science | 30 | 04 | 04 | 12 | 06 | 26 | 86.66 |
| 24 | Logic | 39 | 12 | 06 | 10 | 07 | 35 | 89.74 |
| 29 | Bis.Studies | 36 | 02 | 04 | 15 | 08 | 29 | 80.55 |
| 30 | Accounting | 36 | -- | 02 | 13 | 10 | 25 | 69.44 |
| 44 | Islam | 74 | 12 | 28 | 20 | 09 | 69 | 93.44 |
| 72 | Tamil | 71 | 23 | 18 | 15 | 08 | 64 | 90.14 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Stream | No.of sat | No.of pass | Percentage | University Entrnce |
|---|---|---|---|---|
| Bio Science | 53 | 30 | 56.60 | 30 |
| Mathematics | 37 | 17 | 45.94 | 17 |
| Commerce | 36 | 23 | 63.88 | 23 |
| Arts | 76 | 65 | 85.52 | 62 |
| **Total** | **202** | **135** | **66.83** | **132** |

மனைவி : ஏங்க இப்படி பழுதாப் போன மீன வாங்கிவந்திங்க?
கணவன் : நல்ல மீன் கொண்டு வந்தாப்போல நீ என்ன ருசியாவா சமைக்கப்போற...... அதான் பழுதான மீன் வாங்கி வந்தன்.

பையன் : மல்லிகப் பூவுட மணம் எனக்கு ரொம்ப பிடிக்கும் உனக்கு எந்த மணம் பிடிக்கும்?
பையன் : எனக்குத் திருமணம் பிடிக்கும்.

மணி : எனக்கி லஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவில் வேலை கிடைச்சிருக்கு
சனி : எப்படிடா கிடச்சிது
மணி : 3 லட்சம் கொடுத்தேன்

சுரையா : எக்ஸ்கியுஸ்மீ Side Please
நரையன் : Sorry எனக்கு Side கொடுக்கத் தெரியாது. Side அடிக்கத்தான் தெரியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பாசிரியருடன் மாணவ - மாணவிகள் - 2007



12A ARTS



12 MATHS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர ஆசிரியர் குழாம் - 2007

| | | |
|---|---|---|
| 01) ஜனாப். எம். எம். நிஸார்டீன் (V.P.) | - | இணைந்த கணிதம் |
| 02) ஜனாப். ஏ. எல். ஏ. றஹீம் (S.H.) | - | இணைந்த கணிதம் |
| 03) ஜனாபா. எம். செயினுலாப்தீன் | - | பொருளியல் |
| 04) ஜனாப். எஸ். எம். சழூன் (S.H.) | - | கணக்கீடு |
| 05) ஜனாப். எம். மீராலெவ்வை | - | வணிகக்கல்வி |
| 06) ஜனாபா. ஜே. செயினுடீன் | - | உயிரியல் |
| 07) ஜனாபா. யூ. அபுசாலி | - | தமிழ் |
| 08) ஜனாபா. ஜே. இப்றாலெவ்வை | - | இரசாயனவியல் |
| 09) ஜனாப். ரீ. எம். ஹனீபா | - | பொருளியல் |
| 10) ஜனாப். எச். எம். அன்வர் அலி | - | அரசியல் மூலதத்துவம் |
| 11) ஜனாப். ஏ. எம். ஏ. கரீம் | - | விவசாய விஞ்ஞானம் |
